(இ) ஒவ்வோராண்டும் அறிவியல் ஆய்வுக்கூட மானியம் வழங்கு கையில், மாணவர் எண்ணிக்கை அதிகமாக உள்ள பள்ளிகளுக்கே முன் னுரிமை வழங்கப்படுகிறது. அய்யங்காளிபாளையம், விஜயபுரம், பெருமா நல்லூர் ஆகிய ஊர்களில் உள்ள அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதால் அப்பள்ளிகளுக்கு இதுவரை அம்மானியம் வழங்கப்படவில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, விஞ்ஞானக் கூடங் கள் இல்லாததன் காரணமாக சுற்று வட்டாரத்தில் இருக்கும் கிராம மக்கள் விஞ்ஞானக் கூடம் இருக்கும் நகரத்திற்கு வருகிறார்கள். ஆகவே, அந்தக் கல்வி நிலையங்களில் போதிய அளவுக்கு மாணவர்கள் சேர வில்லை. இப்படிப்பட்ட விஞ்ஞானக் கூடம் அமைக்கப்படுமானால், அங்கே மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாவதற்கு வசதி ஏற்படும். ஆகவே, அரசு அதை விரைவாகச் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 40 அல்லது 50 விஞ்ஞானக்கூடம் அமைப்பதற்காக ரூ. 40,000 வழங்கப்படுகிறது. இதை ஒவ்வொரு கல்வி வட்டத்திலும் ஒவ்வொரு பள்ளிக்கூடம் என்ற அளவில் தேர்ந்து எடுத்து செய்கிறோம். 1,200, 1,000, 900 என்று மாணவர்கள் இருக்கும் பள்ளிகளில் விஞ்ஞானக் கூடங்கள் இல்லாத நிலையில் அவைகளுக்கு முன்னுரிமை வழங்கித்தர வேண்டி யிருக்கிறது. இப்படிப்பட்ட பள்ளிகளுக்குப் பயன்படத் தக்க அளவிற்கு இயங்கும் ஆய்வுக் கூடம் ஒன்றை சென்ற ஆண்டு 14 மாவட்டங் களில வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இயங்கும் ஆய்வுக் கூடங்கள் (மொபைல் லேபரடரிகள்) 15 உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பயன்படும் வகையில் இருக்கிறது.

New Course in Engineering Colleges.

*495 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that a Committee has been constituted to examine the proposal to introduce sandwich course of study in Engineering Colleges in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(ஆ) வினவிற்கு இடமில்லை.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, லா காலேஜில் படிப்பவர்கள் வேறு வேலையில் இருந்து கொண்டு கூடப் படிக்கலாம். இன்ஜினீரிங் காலேஜில் படிப்பதற்கு வேறு வேலையிலிருந்து கொண்டு படிப்பதற்கு அனுமதிப்பதில் என்ன சங்கடம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுமாதிரி "சான்ட்விச் கோர்ஸ்" என்ற வகையில் ஒரு கமிட்டி அமைக்கப்படவில்லை. ஆனால் ஒரு கமிட்டி "போர்டு ஆப் ஸ்டடீஸ்" இன் இன்ஜினீரிங் ஆப் தி மதுரை யூனிவர்சிடி என்று அமைக்கப்பட்டு, டெக்ஸ்டைல் டெக்னாலஜியில் மட்டும் தியாகராஜா கல்லூரியில் ஏற்படுத்தலாமா என்று செயற் குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள்.

அந்தக் கருத்துரை மாநில நூற்பு ஆராய்ச்சிக் கழகத்தால் ஆராயப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த முறை வருமானால் டெக்ஸ்டைல் டெக்னாலஜியில் பரிட்சார்த்தமாக ஏற்படுத்த வேண்டும். அதற்கே கிட்டத்தட்ட $2\frac{1}{2}$ லட்சம் செலவாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அதிலே $37\frac{1}{2}$ சதவீதம் மத்திய அரசும், $37\frac{1}{2}$ சதவீதம் மாநில அரசும் மீதமுள்ள 25 சதவீதம் அந்த ஸ்தாபனமும் ஏற்க வேண்டுமென்ற அடிப்படையில் அது அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

கோவை விளையாட்டு அரங்கம்.

*496 வினா— திரு சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் கட்டப்பட்டு வருகின்ற விளையாட்டு அரங்கத்தின் வேலைகள் எப்போது முடிவுபெறும்?

(இ) அதன் செலவு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) கோவையில் கட்டப்பட்டு வரும் விளையாட்டு அரங்கத்தின் வேலைகள் 1974 ஏப்ரலுக்குள் முடிவடையும்.

(இ) அரங்கத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவுத்தொகை ரூ. 25 லட்சம். (ரூபாய் இருபத்தைந்து லட்சம் மட்டும்).

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, மொத்தம் செலவழிக்கப்படுகிற அந்த 25 லட்சம் ரூபாயில் அரசாங்கம் கொடுத்த மானியம் எவ்வளவு? அதைத் தவிர நகர மன்றத்திலிருந்து கொடுக்கப்பட்ட பணம் எவ்வளவு? தனியாரிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணம் எவ்வளவு? இந்த விளையாட்டு மைதானம் கட்டி முடிக்கப்பட்டால்,

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS